நாள் - 25.02.2026

**C.C. No.**12/2025

**அ.சா.4- காளிமுத்து, த/பெ. பழனி.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 25th **day of February** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் முருகேசன் குடும்பத்திற்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிற விபரம் எனக்கு தெரியும். போலீசார் விசாரணையில் யாருடைய தோட்டத்திலிருந்து மண் வழித்துக் கொண்டிருந்தோம் என குறிப்பாக சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நடந்ததாக சொல்லப்படும் பிரச்சனையின் போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான், முருகேசன், மாகாளி, பால் கவுண்டர், வெங்கடாசலம் ஆகியோர்கள் இருந்தோம். நான் முதல் விசாரணையில் பொதுத்தடத்தில் எந்த இடத்தில் பிரச்சனை ஏற்பட்டது என குறிப்பாக சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் முருகேசன் தோட்டத்தில் வேலை செய்து வருவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:12:30 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**